# **<u>சூரியகாந்தி</u>**

1. அடிச்சாம்பல் நோய் : **<u>பிளாஸ்மோபேரா ஹால்ஸ்டிடி</u>**

2. துருநோய் : பக்சீனியா ஹீலியான்தி

3. அல்டர்னேரியா கருகல் : அல்டர்னேரியா ஹீலியான்தி

4. சார்கோல் அழுகல் : மேக்ரோபோமினா பேசியோலினா

5. ஸ்கிலிரோசியம் வாடல் அல்லது அழுகல் : ஸ்கிலிரோசியம் ரால்ப்ஃசி

6. ரைசோபஸ் தலை அழுகல் : ரைசோபஸ் ஸ்பிசிஸ்

7. சூரியகாந்தியின் வைரஸ் நோய்கள்:

அ. சூரியகாந்தி நெக்ரோசிஸ் நேரய்

ஆ. புகையிலை வரிக்கோடு வைரஸ்

இ. மஞ்சள் பட்டை நோய்

ஈ. இலை நெளிவு நோய்

1. அடிச்சாம்பல் நோய் : **<u>பிளரஸ்மோபேரோ ஹாலடஸ்டிடி</u>**

**<u>அறிகுறிகள்:</u>**

1. இந்நோய் அதிகமாக விதையின் மூலம் பரவுகிறது.

2. இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடிகள் அழுகியும், இலைகளில் பழுப்பு நிற கோடுகளும், வேர்களில் அல்லது தண்டுகளில் முடிச்சுகள் காணப்படும்.
3. முதல் நிலை அறிகுறியாக மேல் இரண்டு இலைகள் மஞ்சள் நிறமாக மாறியிருக்கும்.
4. தீவிரமாக நோய் தாக்கப்பட்ட செடிகளில் வளர்ச்சி குன்றியும், இலைகள் முழுவதும் வெளிர் பச்சை நிறத்துடன் காணப்படும்.
5. தண்டுகள் ஒடியும் தன்மையுடையதாகவும்,இலைகள் திருகிய தோற்றத்துடனும் , மஞ்சள் மற்றும் பச்சை நிறம் இலைகளில் மாறி மாறி காணப்படும்.
6. இலைகளின் அடியில் பூசண வளர்ச்சி காணப்படும்.

<u>கட்டுப்பாடு</u>

1. விதையை மெட்டலாக்சில் 3 கிராம்/கிலோ என்ற அளவில் நேர்த்தி செய்ய வேண்டும்.
2. பயிர் செய்யப்படும் இடம், நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளை அழித்தல் ஆகியன சிறிது கட்டுப்பாட்டைக் கொடுக்கும்.

**<u>2.துருநோய் : பக்சீனியா ஹீலியான்தி</u>**

**<u>அறிகுறிகள்:</u>**

1. இந்நோய் சம்பா பருவக்காலங்களில் அதிகமாகவும் குருவை பருவத்தில் குறைவாகவும், மெதுவாகவும் உருவாகும்.

2. இந்நோய் அல்டெர்னேரியா கருகல் நோயுடன் சேர்ந்து 40 சதவிகிதம் குறைந்த மகசூலைத் தருகிறது.

3. யுரிடோ துகள்கள் முதலில் இலையின் கீழ் பாகத்திலும், பின்னர் இளம் இலைகளிலும், அதன்பின் செடியின் எல்லா பாகத்திலும் அதாவது தண்டு, இலைக்காம்பு, பூக்களின் பாகங்கள் ஆகிய பாகங்களிலும் காணப்படுகிறது.

<u>கட்டுப்பாடு:</u>

1. டைதோகார்பமேட் பூசண கொல்லியான மேங்கோசெப் அல்லது சினெப் 0.2 லிருந்து 0.3 சதவிகிதம் 2 - 3 முறை தெளிக்கலாம்.
2. கந்தக பூசணக்கொல்லியான கரையும் கந்தகம் (0.2 சதவிகிதம்) கந்தகத்தூள் (15கிலோ/ஹெக்டர்) என்ற அளவில பயன்படுத்தலாம்.
3. அல்டர்னேரியா கருகல் : **<u>அல்டர்னேரியா ஹீலியான்தி</u>**
4. இந்நோய் பயிர் செய்யப்படும் எல்லா இடங்களிலும் பரவியுள்ளது.
5. விதை மற்றும் எண்ணெய் மகசூலை பாதிக்கிறது.
6. சூரிய காந்தி தலைப்பகுதியின் விதைகளின் எண்ணிக்கை தரம் குறைகிறது

**<u>அறிகுறிகள்:</u>**

1. இலைகளில் அடர் பழுப்பு அல்லது கருப்பு நிறத்தில் வட்ட வடிவ புள்ளிகள் தோன்றுகின்றன.
2. இலைப்புள்ளிகளைச் சுற்றி செல்கள் இறந்து காணப்படும். வட்ட வடிவ வளையம் போன்ற கோடுகளும் மத்திய வெண்மையான பகுதியும் இருக்கும்.